**DEPOSITION OF WITNESS**
(Chapter XXV Code of BNSS 2023)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 179/2024**

Deposition of Witness of PW6

| | | | |
|---|---|---|---|
| Name | : தீபா | Caste | : |
| Father/Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 24th June 2025.

**எதிரி ஆஜரில் இல்லை.**
**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது திருச்செங்கோடு ஊரக காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021 ம் ஆண்டு மொடக்குறிச்சி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது நிலைய குற்ற எண்.278/2021 வழக்கில் காவல்உதவி ஆய்வாளர் தமிழ்செல்வி என்பவர் முதல் விசாரணை மேற்கொண்டிருந்த நிலையில் மேற்படி வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியை 01.11.2021 ம் தேதி எதிரி பாலகிருஷ்ணன் என்பவரை காவல்நிலையத்தில் வைத்து கைது செய்து தக்க இருநபர் பிணையில் விடுவித்தேன். வழக்கில் சம்பந்தப்பட்ட இரு வாகனங்களையும் வட்டார போக்குவரத்து அலுவலர் கிழக்கு அவர்களிடம் மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன்.

2. பின்பு இவ்வழக்கில் இறந்துபோன சிவசாமி என்பவருக்கு பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் திருமதி.அம்சநித்யா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை பெற்றேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்தேன்.** மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கதிர்வேல் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். **அது அறிக்கைகள் முறையே அ.சா.ஆ.8,9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சட்டபிரிவு 279, 304(a) இதசன் கீழ்

குற்ற இறுதி அறிக்கை 10.03.2022 ல் எதிரி மீது தாக்கல் செய்தேன்.

எ**திரிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒம்/– சாட்சி தீபா

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
எழுமாத்துார் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 179/2024**

Deposition of Witness of PW5

| | | | |
|---|---|---|---|
| Name | : S. தமிழ்செல்வி | Caste | : |
| Father/Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 24th June 2025.

எதிரி ஆஜரில் இல்லை.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

<u>**முதல் விசாரணை:**</u>

நான் தற்போது கொடுமுடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.10.2021ம் தேதி மொடக்குறிச்சி காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது தலைமை காவலர் பாலாஜி என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து கொடுத்த வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவம் இடம் சென்று காலை 11.30மணிக்கு சாட்சிகள் முத்துக்குமார், மனோஜ்குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அவைகள் முறையே அ.சா.ஆ.4,5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சி**கிச்சையில் இருந்த சிவசாமி இறந்து போனதால் கோவை KMCH மருத்துவமனையில் பஞ்சாயத்தார் முன்னிலையில் பொறுப்பு காவல் ஆய்வாளர் உத்தரவின்படி சிவசாமி பிரேத விசாரணை செய்தேன். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்தேன்.**

2. பின்பு பிரேத விசாரணை செய்த சிவசாமியின் உடலை பிரேத பரிசோதனைக்காக பெருந்துறை அரசு மருத்துவமனையில் வேண்டுகோள் கடித்தின் மூலம் பிரேதத்தை ஒப்படைத்தேன். சாட்சிகள் 1 முதல் 7 வரையானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்து ஏறக்குறைய 12 மணி நேரம் கழித்து நான் சம்பவஇடம் சென்று பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யாமலும், காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன

நேரத்தில் சொன்ன தேதியில் சொன்னது போல் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

ஓம்/– சாட்சி தமிழ்செல்வி

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.